தொடக்கப்பள்ளி ஆண்டிறுதித் தேர்வு

தொடக்கநிலை நான்கு

தமிழ்மொழி

பெயர் : ____________________ மதிப்பெண் : ______________/50

வகுப்பு : P4/ ___________ நேரம் : 1 hr 30 mins

<u>கட்டளைகள்</u>

1. ஆசிரியர் சொல்லும்வரைத் தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

PRIMARY SCHOOL

# படக்கட்டுரை

கீழே உள்ள படத்தையும் உதவிச்சொற்களையும் கொண்டு 70 சொற்களுக்கு ஒரு கதை அல்லது கட்டுரை எழுது:

பெயர்: ____________________ தேதி: ____________



புதிய மிதிவண்டி, மகிழ்ச்சியாக, பூங்காவிற்கு, நண்பனை,
கற்றுத்தரும்படி, சம்மதித்தான், வழியில், கல்இடறி,

1 முதல் 22 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3, அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

## வேற்றுமை உருபு

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை நீள்வட்டத்தில் நிழலிடு. (5 மதிப்பெண்கள்)**

சூரியன் பூமியைச் சுட்டெரித்த உச்சி நேரம். வளையல் வியாபாரி ஒருவர், வளையல் ______(1)______ தன் தலையில் வைத்துச் சுமந்தபடி, தள்ளாடி தள்ளாடி நடந்துகொண்டிருந்தார். அவர் ஒரு செல்வந்தர் ______(2)______ பக்கத்தில் போய் நின்றார். அவருக்கு மிகுந்த தாகம் எடுக்கவே செல்வந்தர் வீட்டின் கதவைத் தட்டினார். சிறிது ______(3)______ கதவைத் திறந்து கொண்டு அந்தச் செல்வந்தர் வெளியே வந்தார். வளையல் வியாபாரி அவரிடம் “ ஐயா! இன்று எனக்கு வியாபாரம் எதுவுமே நடக்கவில்லை. பசியும் வயிற்றைக் கிள்ளுகிறது. ______(4)______ நடக்க முடியவில்லை. ரொம்ப தாகமாக இருக்கிறது. ______(5)______ கொஞ்சம் தண்ணீர் கொடுங்களேன்” என்று மிகவும் பணிவுடன் கேட்டார். அந்தச் செல்வந்தரும் அவருக்குக் குடிக்கத் தண்ணீரும் சாப்பிட உணவும் கொடுத்து அனுப்பினார்.

1. (1) மூட்டைகளின் (2) மூட்டைகளுக்கு
   (3) மூட்டைகளை (4) மூட்டைகளிலிருந்து ( )

2. (1) வீட்டில் (2) வீட்டின்
   (3) வீட்டை (4) வீட்டோடு ( )

3. (1) நேரத்தில் (2) நேரத்திலிருந்து
   (3) நேரத்தை (4) நேரத்திற்கு ( )

4. (1) என்னால் (2) என்னோடு
   (3) என்னுடன் (4) என்னை ( )

5. (1) குடிப்பதை (2) குடிப்பதற்கு
   (3) குடிப்பதோடு (4) குடிப்பதால் ( )

## செய்யுள் / பழமொழி

கீழ்க்காணும் செய்யுளை / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (5 மதிப்பெண்கள்)

6. அன்பான நண்பனை ஆபத்தில் ____________________ .

(1) அழியலாம் (2) அறிவிக்கலாம்
(3) அசத்தலாம் (4) அறியலாம் ( )

7. ____________________ பிதாவும் முன்னறி தெய்வம்.

(1) அன்னையும் (2) தாயும்
(3) தாயாரும் (4) அம்மாவும் ( )

8. தேடாது அழிக்கின் பாடாய் ____________________.

(1) தொடரும் (2) செய்யும்
(3) வரும் (4) முடியும் ( )

9. அறிஞர்க்கு ____________________ கற்றுணர்ந்து அடங்கல்.

(1) பெருமை (2) அழகு
(3) அறிவு (4) பலம் ( )

10. எறும்பு ஊரக் கல்லும் ____________________.

(1) மறையும் (2) கரையும்
(3) தேயும் (4) உருகும் ( )

## <u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி.**

குமாரி கல்பனா ஒரு கெட்டிக்காரப் பெண்மணி. அவர் தனது வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, ஒரு பள்ளிக்கு அருகில் ஓர் எளிய **இல்லத்தை** வாங்கினார். முதல் சில வாரங்கள் சத்தமின்றி அமைதியாகக் கழிந்தன. ஆனால், அந்த அமைதி பள்ளி திறக்கும் வரைதான் நீடித்தது.

பள்ளி திறந்த முதல் நாள், மூன்று சிறுவர்கள், பள்ளி நேரம் முடிந்தவுடன், அந்தத் தெரு வழியே சென்றனர். அவ்வாறு வரும்போது தெருவிலிருந்த பெட்டியைப் பலமாக அடித்துப் பெருத்த ஒலியை உண்டாக்கினர். தினமும் அதுபோல் மூவரும் செய்யத் **தொடங்கினர்**. குமாரி கல்பனாவினால் சத்தத்தைப் பொறுக்க முடியவில்லை. அதனால், அடுத்தநாள், அந்தச் சிறுவர்கள் வந்து கொண்டிருக்கையில், அவர் அவர்களைச் சந்தித்தார். எப்போதும் போல, அவர்கள் **செவியைப்** பிளக்கும்படி பெட்டியைத் தட்டி ஒலியெழுப்பிய போது, குமாரி கல்பனா, அவர்களைத் தடுத்து நிறுத்தி, "உங்களுக்கு இந்த மாதிரி செய்வது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? நானும் சின்ன வயதில் உங்களைப் போல்தான் செய்து வந்தேன். எனக்காக நீங்கள் ஒன்று செய்வீர்களா? நீங்கள் தினமும் இதே போல் செய்தால் உங்களுக்கு ஆளுக்கு மூன்று வெள்ளி பணம் தருவேன்" என்றார். சிறுவர்கள் அதைக் கேட்டு **உற்சாகமடைந்தனர்**.

சில நாட்களுக்குப் பிறகு, குமாரி கல்பனா மீண்டும் அந்தச் சிறுவர்களைச் சந்தித்து, தனது மருத்தவச் செலவுகள் அதிகரித்துவிட்டதால் இனிமேல் ஒரு வெள்ளி பணம் தான் அவர்களுக்குத் தர முடியும் என்று கூறினார். இதைக் கேட்டச் சிறுவர்கள், ஒரு வெள்ளிப் பணத்திற்கெல்லாம் தங்களால் பெட்டிகளை அடித்துச் சத்தம் எழுப்ப முடியாது என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டுக் காலி செய்தனர். தன்னுடைய தந்திரம் பலித்ததை எண்ணி, குமாரி கல்பனா பெருமைப்பட்டுக் கொண்டார்.

கீழ்க்காணும் கேள்விகள், மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(5 மதிப்பெண்கள்)**

11. குமாரி கல்பனாவிற்கு, முதல் சில வாரங்கள் சத்தமின்றி அமைதியாகக் கழிந்ததன் காரணம் என்ன?

1. பள்ளி அருகில் இருந்ததே
2. பள்ளி திறந்திருந்ததே
3. பள்ளி மூடியிருந்ததே
4. பள்ளி தொலைவிலிருந்ததே

( )

12. சிறுவர்கள் எப்படி ஒலியை எழுப்பினர்?

1. பெட்டிகளை உருட்டி
2. பெட்டிகளை தள்ளி
3. பெட்டிகளை வேகமாக அடித்து
4. பெட்டிகளை பெருக்கி

( )

13. ஏன் குமாரி கல்பனா சிறுவர்களைச் சந்தித்தார்?

1. ஒலி எழுப்பிய சிறுவர்களிடம் பேச நினைத்ததால்
2. ஒலி எழுப்பிய சிறுவர்களைப் பார்க்க விரும்பியதால்
3. மேலும் சத்தத்தைக் கேட்க விரும்பியதால்
4. சத்தத்தைத் தாங்க முடியாததால்

( )

14. குமாரி கல்பனா, சிறுவர்கள் மேலும் சத்ததை எழுப்பினால் அவர்களுக்கு என்ன தருவதாகக் கூறினார் ?

1. ஒவ்வொருவருக்கும் $1
2. ஒவ்வொருவருக்கும் $3
3. மூவருக்கும் $1
4. மூவருக்கும் $3

15. எதனால் குமாரி கல்பனா பெருமைபட்டுக் கொண்டார்?

1. சூழ்நிலையை மிகவும் சாமர்த்தியமாகக் கையாண்டதால்
2. சூழ்நிலையை சிறுவர்களிடம் விளக்கியதால்
3. சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டதால்
4. சூழ்நிலையைப் புரிந்துகொண்டதால் ( )

சொற்பொருள்

**கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் அதன் எண்ணை நீள்வட்டத்தில் நிழலிடு.**
(4 மதிப்பெண்கள்)

16. இல்லத்தை -
(1) வீட்டை
(2) அலுவலகத்தை
(3) உணவகத்தை
(4) மருந்தகத்தை

17. தொடங்கினர் -
(1) விரும்பினர்
(2) முற்பட்டனர்
(3) ஆரம்பித்தனர்
(4) எண்ணினர்

18. செவியை -
(1) காதை
(2) மூக்கை
(3) தலையை
(4) உடலை

19. உற்சாகமடைந்தனர் -
(1) பெருமையடைந்தனர்
(2) உல்லாசமடைந்தனர்
(3) அதிர்ச்சியடைந்தனர்
(4) ஆர்வமடைந்தனர்

## கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# குடிமைத் தற்காப்பு தினம் நம் தினம்



15.2.2009




## அவசரக் கால ஒலி

- நண்பகல் மணி 12க்கு ஒலிக்கப்படும்
- குடிமக்கள் அனைவரும் உடனடியாக வானொலியில் இடம்பெறும் செய்தியைக் கேளுங்கள்

நகர மண்டப சமூக நிலையத்தில்

## அவசரக் கால பயிற்சி வகுப்பு

- அவசரக் காலத்திற்கு தேவைப்படும் பொருட்களின் விவரம்
- தன்னையும் தன் குடும்பத்தினரையும் தற்காத்துக் கொள்ளும் முறைகள்
- செயல்விளக்க அங்கம்



குறிப்பு:
மேடை நாடகம்

**`வாருங்கள்! காப்போம்`**

- 120, ஸ்டாம்பர்ட் சாலையில் உள்ள விக்டோரியா அரங்கத்தில்
- மாலை ஏழு முதல் ஒன்பது வரை
- நூற்று ஐம்பது இருக்கைகள் தான்
- அனுமதி இலவசம்
- முதலில் வருபவருக்கு முதலில் இடம் அளிக்கப்படும்

கீழ்க்காணும் வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
**(6 மதிப்பெண்கள்)**

20. அவசரக் கால ஒலி எழுப்பப்படும்போது குடிமக்கள் என்ன செய்ய வேண்டும்?

(1) நகர மண்டப சமூகநிலையத்திற்குச் செல்ல வேண்டும்
(2) தற்காப்புப் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்
(3) வானொலியைக் கேட்க வேண்டும்
(4) விக்டோரிய அரங்கத்திற்குச் செல்ல வேண்டும்

21. மேடை நாடகத்தை எத்தனை பேர் கண்டுகளிக்கலாம்?

(1) 7
(2) 8
(3) 120
(4) 150

22. அவசரக் கால பயிற்சி வகுப்பு எங்கு நடைபெறுகிறது?

(1) ஸ்டாம்பர்ட் சாலையில்
(2) நகர மண்டப சமூக மன்றத்தில்
(3) விக்டோரியா அரங்கத்தில்
(4) விக்டோரியா சாலையில்

## ஒலி வேறுபாடு

## கோடிட்ட இடத்தை நிரப்பு (10 மதிப்பெண்கள்)

23. குமார் ஒவ்வொரு நாளும், இரவு ______________ பால் குடிப்பான்.

24. முதலையின் ______________ பல பொருட்கள் செய்யப் பயன்படுகிறது.

25. சட்டையில் ______________ ஊற்றிவிட்டதால், அம்மா சட்டையைத் துவைத்தார்.

26. மல்லிகைப்பூவின் ______________ அறை எங்கும் பரவியது.

27. போட்டியில் வென்ற ______________, தோழர்கள் பாராட்டினர்.

| | |
|---|---|
| தோல் | வேளையில் |
| எண்ணை | கரி |
| தோள் | மனம் |
| என்னை | கறி |
| வேலையில் | மணம் |

முன்னுணர்வுக் கருத்தறிதல்

**கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)**

வேடன் ஒருவன் வேட்டை நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய் அவனுக்கு 28.___( )___ உழைத்தது. அவன் எப்பொழுது வேட்டைக்குச் சென்றாலும் அவனுடன் அது சென்றது. பல 29.___( )___ வேட்டையாட அவனுக்குத் துணை செய்தது. இரவு நேரத்தில் அவன் வீட்டைக் காவல் காத்தது. இதனால் அவனிடம் செல்வம் சேர்ந்து கொண்டே இருந்தது.

ஆண்டுகள் பல சென்றன. அந்த நாய்க்கு 30.___( )___ . அதனால் முன் போல ஓடியாடி உழைக்க முடியவில்லை. வேட்டையிலும் விலங்குகளை அதனால் பிடிக்க முடியவில்லை. `தன் நாய் சோம்பேறியாகிவிட்டது. 31.\_\_\_( )\_\_\_ தன்னை ஏமாற்ற முயல்கிறது` என்று அவன் நினைத்தான்.

ஒருமுறை வேட்டையில் காட்டெருமையைத் துரத்திச் சென்ற நாய், அதனால் 32.___( )___ காயம் அடைந்தது. காட்டெருமையும் தப்பித்துச் சென்றுவிட்டது. காட்டெருமையைப் பிடிக்காத நாய்க்கு அன்று வேடன் உணவு அளிக்கவில்லை.

| | |
|---|---|
| (1) விலங்குகளின் | (2) வயதாகிவிட்டது |
| (3) உண்மையாக | (4) ஏமாற்றி |
| (5) அடிபட்டது | (6) தாக்கப்பட்டால் |
| (7) உழைக்காமல் | (8) விலங்குகளை |
| (9) வேகமாக | (10) தாக்கப்பட்டு |

## சுயவிடைக் கருத்தறிதல்

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை எழுது. (10 மதிப்பெண்கள்)**

மணியன் ஒரு பொறுப்பற்ற, சுட்டித்தனம் மிகுந்த சிறுவன். பள்ளி விடுமுறை நாட்களில் ஆற்றங்கரை ஓரங்களில் உள்ள மரங்களில் ஏறி பறவைகளின் முட்டைகளைத் தேடிப் பிடித்து, அதை வைத்து விளையாடுவான். விளையாடி முடிந்ததும் அதை அநியாயமாக உடைத்துவிடுவான். இவ்வாறு அவன் பல குறும்புகளைச் செய்வான்.

ஒரு சமயம் மணியனுக்குத் திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டது. வீட்டில் படுத்த படுக்கை ஆனான். மணியனைப் பார்க்க அவனோடு தினமும் விளையாடும் நண்பர்கள் யாருமே வரவில்லை. இதனால், மணியன் மனவருத்தம் அடைந்தான்.

அப்போது அவனைத் தேடி, அவனது பள்ளி நண்பர்களான, அருணும் மாணிக்கமும் வந்திருந்தனர். அருணும் மாணிக்கமும் பள்ளியில் நன்றாகப் படிக்கும் நண்பர்கள். அவர்கள் ஏன் தன்னைத் தேடி வருகிறார்கள்? என்று மணியனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் மணியனைக் கண்டு நலம் விசாரித்துவிட்டு, அவனுடைய மருந்து செலவிற்காகத் தங்களிடம் இருந்த சேமிப்புப் பணத்தைக் கொடுத்தனர். பின்னர், அவனிடம், " மணி, நீ தீய நண்பர்களோடு பழகினால், எப்போதும் உனக்குத் தீமைகள் நடக்கும். நல்ல நண்பர்களோடு சேர்ந்தால் நன்மை கிடைக்கும். இனிமேல் நீ தீய நண்பர்களோடு பழகாதே! அப்போது தான் நீ நன்றாகப் படிக்க முடியும்" என்று அறிவுரை கூறிச் சென்றனர். மணியனும் இனிமேல் நல்ல நண்பர்களோடு சேர்வது என்று முடிவெடுத்தான்.

விடை எழுது.

33. மணியன் பறவைகளின் முட்டைகளுடன் விளையாடிய பின் அவற்றை என்ன செய்வான்?

______________________________________________

______________________________________________

34. மணியன் ஏன் படுத்த படுக்கை ஆனான்?

__________________________________________

__________________________________________

35. மணியனுடைய வருத்தத்திற்குக் காரணம் என்ன?

__________________________________________

__________________________________________

36. அருணும் மாணிக்கமும் எதற்காக மணியனைப் பார்க்க வந்திருந்தனர்?

__________________________________________

__________________________________________

37. எது மணியன் நல்ல முடிவெடுக்கக் காரணமாக அமைந்தது?

__________________________________________

__________________________________________

முற்றும்

விடைகளைச் சரி பார்!

**P4**

**TESTPAPER 15**

P4 ____________

<u>சூரியன் பூமியைச் சுட்டெரித்த..........</u>

1. 3 2. 2 3. 1 4. 1 5. 2

6. 4 7. 1 8. 4 9. 2 10. 3

11. 3 12. 3 13. 4 14. 2 15. 1

16. 1 17. 3 18. 1 19. 4

20. 3 21. 4 22. 2

23. வேளையில் 24. தோலில் 25. கறி 26. மணம் 27. என்னை

28. 3 29. 8 30. 2 31. 7 32. 10

33. மணியன் பறவை முட்டைகளுடன் விளையாடிய பின் அவற்றை அநியாயமாக உடைத்துவிடுவான்.

34. மணியனுக்கு திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டதால் அவன் படுத்த படுக்கை ஆனான்.

35. மணியனோடு தினமும் விளையாடும் நண்பர்கள் அவனைப் பார்க்க வராததே அவனுடைய வருத்ததிற்குக் காரணமாகும்.

36. அருணும் மாணிக்கமும் மணியனைக் கண்டு நலம் விசாரிப்பதற்காக அவனைப் பார்க்க வந்திருந்தனர்.

37. அருணும் மாணிக்கமும் கூறிய அறிவுரை மணியன் நல்ல முடிவெடுக்கக் காரணமாக அமைந்தது.